பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 01 2026 12 40
சனிக்கிழமை நண்பகல்

## ஆகாஷவாணி செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. பல்லுயிர் பாதுகாப்பில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் இருக்கும் என்று வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

3. மகாராஷ்டிரா துணை முதலமைச்சராக மறைந்த அஜித் பவாரின் மனைவி திருமதி Sunetra Pawar இன்று பதவியேற்கிறார்.

4. இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வரவேற்பு தெரிவித்துள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tejaswin Shankar தங்கப்பதக்கம் வென்றார்.

---இனி விரிவான செய்திகள்---

பல்லுயிர் பாதுகாப்பில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உத்தரப்பிரதேசத்தில் உள்ள Etah பறவைகள் சரணாலயமும், குஜராத்தின் கட்சில் உள்ள Chhari-Dhand ராம்சார் தளங்களாக அறிவிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக அப்பகுதிகளை சேர்ந்தவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

ராம்சார் தளங்களை பாதுகாப்பதற்கும் தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>><><><><><<

*நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் இருக்கும் என்று வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.*

*சத்தீஷ்கரின் ராய்ப்பூர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை விரைவாக எட்டுவதற்கும் உதவும் வகையில் பட்ஜெட் இருக்கும் என்றும் அவர் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து காங்கிரஸ் தொடர்ந்து தவறான தகவல்களை பரப்பி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.*

*இந்த சட்டம் கிராமப்புற வளர்ச்சியை உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.*

*இந்த திட்டத்தின்கீழ் 125 நாட்களுக்கு வேலை வழங்கப்படும் என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.*

*இதற்கிடையே, மத்திய பட்ஜெட்டில் கல்விக் கடனுக்கான வட்டி குறைப்பு குறித்த அறிவிப்பு இடம்பெற வேண்டும் என்பது தங்களது எதிர்பார்ப்பாக உள்ளது என்று தமிழகத்தின் நாகை மாவட்டத்தை சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – பென்னித் - 46 செகண்ட்ஸ்)*

>><><><><><<

*நாட்டின் வளர்ச்சியில் மகளிர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.*

*தேசிய மகளிர் தின ஆணையத்தின் நிறுவன தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*மகளிர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.*

*ஐந்து கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் அவர்களது குழந்தைகளின் ஆரோக்கியம் இணையதளம் மூலம் கண்காணிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*தொலைபேசி வாயிலாக வழங்கப்படும் மனநல சேவை 20 மொழிகளில் தற்போது கிடைப்பதாகவும் அவர் கூறினார்.*

*மகளிர் மேம்பாட்டை கருத்தில் கொண்டே கொள்கைகளை மத்திய அரசு வகுத்து வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.*

>><><><><><<

*செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையுடன் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா வல்லரசாக உருவெடுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த தொழில்நுட்பம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருவதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.*

>><><><><><<

*நாடுமுழுவதும் 25 கோடி மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இதற்கான இயக்கம் கடந்த 2015 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த இயக்கத்தின்கீழ் 93 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்த மண்வள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>><><><><><<

நடப்பு நிதியாண்டின் முதலாவது அரையாண்டில் மண்டல ஊரக வங்கிகளின் வர்த்தகம் 12 லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் இந்த வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து, நிதிசேவைகள் துறை செயலர் திரு எம் நாகராஜூ, ஆய்வு மேற்கொண்டு பேசுகையில், இதனைத் தெரிவித்ததாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை இல்லாத அளவுக்கு இந்த வங்கிகளின் வர்த்தகம் அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் அனைத்தையும் இந்த வங்கிகள் எட்டியுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

காவல் பணி அதிகாரிகள் இரண்டு வருடம் மத்திய பணியில் இருப்பது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது.

இதற்கான அறிவிக்கையை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இதன்படி காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் டிஐஜி பதவி உயர்வுக்கு இது அவசியமாக்கப்பட்டு உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு மட்டும் இது பொருந்தும் என்றும் அந்த உத்தரவில் தெளிவுப்படுத்தப்பட்டு உள்ளது.

>><><><><<

பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் கோவாவில் பிஜேபி நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

மகாராஷ்டிரா துணை முதலமைச்சராக மறைந்த அஜித் பவாரின் மனைவி திருமதி *Sunetra Pawar* இன்று பதவியேற்கிறார்.

மும்பையில் உள்ள மக்கள் மாளிகையில் மாலை 5 மணிக்கு அவர் பதவியேற்கவுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>><><><><><<

ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் பங்கு இன்றியமையாதது என்று தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக நாளிதழில் தாம் எழுதியுள்ள கட்டுரையையும் அவர் பகிர்ந்துள்ளார்.

தொழில் துறையின் வளர்ச்சிக்கு இந்த ஒப்பந்தம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றும் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

>><><><><><<

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கு ஐக்கிய அரபு எமிரேட் வரவேற்பு தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஐக்கிய அரபு எமிரேட்டின் வெளியுறவுத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஒப்பந்தம் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

வடகிழக்கு மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால் கூறியுள்ளார்.

அசாமின் Dibrugarh -யில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டார்.

சிறந்த நிர்வாகத்தை பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி உறுதி செய்துள்ளதாகவும் திரு சர்பானந்தா சோனாவால் கூறினார்.

>><><><><><<

உத்தரப்பிரதேசத்தில் நீர் மேலாண்மை பணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத் துறை அமைச்சர் திரு Swatantra கூறியுள்ளார்.

இன்று ஜான்சியில் 36 கிராமங்களுக்கான நீர் மேலாண்மை திட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இதன் மூலம் கிராமப்புறங்களுக்கு சீரான தண்ணீர் விநியோகம் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><><><<

ஜார்க்கண்டில் உள்ள ஐந்து கிராமங்களில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கும்லா மாவட்டத்திற்கு உட்பட்ட இந்த கிராமங்களில் 18 யானைகள் நுழைந்துள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த தடை உத்தரவு வரும் 15 ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

ஆந்திர சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் 11 ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து விவாதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

சீனாவில் பாதுகாப்பு படையை சேர்ந்த இரண்டு மூத்த ராணுவ அதிகாரிகள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு முறைகேடு புகார்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

விளையாட்டுச் செய்திகள்

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tejaswin Shankar தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் உயரம் தாண்டும் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 8-11, 8-11, 11-7, 11-8, 11-7 என்ற செட்கணக்கில் எகிப்தின் Sana Ibrahim-ஐ வென்றார்.

------------

இந்தியா - நியூசிலாந்து இடையேயான 5வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறுகிறது.

5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை இந்தியா 3-1 என்ற ஆட்டக் கணக்கில் கைப்பற்றியுள்ளது.

----------------

ப்ரோ மல்யுத்த லீக் போட்டியில் ஹரியானா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.